30th March 1963]

கனம் திரு. எம். பக்தவத்சலம் : "நாலும் இரண்டும்" என்ற புத்தகத்திற்கு அளிக்கப்பட்ட அங்கீகாரம் ரத்து செய்யப்பட்டுள்ளது என்று நான் சொன்னேன். மற்ற விவரங்களுக்கு எல்லாம் தனியாகக் கேள்வி போட்டால் சொல்லுகிறேன்.

Co-operative Printing Presses

* 462-A. *Q.*—K. A. MATHIALAGAN : Will the Hon. the Minister for Co-operation be pleased to state the steps taken for setting up Co-operative Printing Presses at Ramanathapuram and Kanyakumari?

கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்ருடியார் : ராமநாதபுரம் ஜில்லா காரைக்குடியில் ஒரு கூட்டுறவு அச்சகம் ஏற்படுத்த உத்தேசிக்கப் பட்டுள்ளது. இந்த அச்சகத்தைப் பதிவு செய்வதற்கு கூட்டுறவு பதிவாளர் சிவகங்கை கூட்டுறவு துணைப் பதிவாளருக்கு அனுமதி கொடுத்திருக்கிறார்.

கன்னியாகுமரி ஜில்லாவில் தக்கலையில் 1963-ம் ஆண்டு ஜனவரி மாதம் 28-ம் தேதி ஒரு கூட்டுறவு அச்சகம் தொடங்கப்பட்டுள்ளது.

Labour contract societies

* 462-B. Q.—SRI K. NARAYANASWAMI PILLAI : Will the Hon. the Minister for Co-operation be pleased to state whether there is any proposal to organize Labour Contract Societies in the district to solve the unemployment problem?

கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்ருடியார் : இம்மாநிலத்தில் தற்சமயம் எழுபத்தியொன்று ஆரம்பக் கூட்டுறவு தொழில் ஒப்பந்த சங்கங்களும், கன்னியாகுமரி ஜில்லாவில் ஒரு ஜில்லா கூட்டுறவு தொழில் ஒப்பந்த சங்கமும் இருக்கின்றன. வாய்ப்பும், தொழிலாளர்களின் ஆதரவும் எங்கெங்கு இருக்கிறதோ அங்கெல்லாம் ஆரம்ப சங்கங்கள் ஏற்படுத்தப் படுகின்றன.

நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி விற்பனை சங்கம் (ராஜபாளையம்)

* 462-C.கேள்வி.—**திரு. ஆ. கு. சுப்பையா :** கனம் கூட்டுறவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், ராஜபாளையம் துரைச்சாமிபுரம், நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி விற்பனை சங்கத்தில், ஊழல்கள், மோசடிகள் இருப்பதாக சர்க்காருக்கு புகார் வந்ததா ?

(இ) அப்படியானல், அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்ருடியார் : (அ) ஆம்.

(இ) இந்த புகார் மனு விசாரிக்கப்பட்டு வருகிறது.

திரு. ஆ. கு. சுப்பையா : இந்தப் புகார் இரண்டு வருஷ காலமாக இருந்துகொண்டிருக்கிறது. எப்பொழுது விசாரணை முடிவடையும் ?

கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்ருடியார் : விதிகளின்படி தீவிரமாக நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படுகிறது. மற்ற எதுவும் இந்த சமயத்தில் நான் சொல்வதற்கில்லை.

திரு. இராம. அரங்கண்ணல் : கூட்டுறவு சங்கங்களைப்பற்றிப் பல புகார்கள் இப்படி வருகின்றன. வளரவேண்டிய இயக்கம் இப்படி நடந்து